**FTB** Register No. | | | | | | | | |

**4972–21**

(For the candidates from 2009 – 2010 to 2015 – 2016)

**B.A.B.L./B.A.LL.B DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five - year Regular Course)

Fifth Year – Ninth Semester

**CIVIL PROCEDURE CODE**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் பின்வருவனவற்றுள் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Explain the scope, object and applicability of Section 5 of the Limitation Act in the matter of condoning the delay in moving the judicial process.
நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதில் கால தாமத்தை மன்னிக்கும் பொருட்டு ஏற்பட்டுள்ள கால வரையறை சட்டத்தில் 5வது பிரிவின் நோக்கெல்லை, நோக்கம் மற்றும் பொருந்தும் தன்மை ஆகியவற்றை விளக்குக.

2. Explain 'Temporary injunction'. State the objects and grounds for granting temporary injunction.
இடைக்கால உறுத்துக் கட்டளையினை விளக்கவும் இடைக்கால உறுத்துக்கட்டளையின் நோக்கத்தையும் அதை வழங்குவதற்கு தேவையான காரணங்களையும் கூறுக.

3. What are the powers of an appellate court? When additional evidence can be admitted in appeal?
மேல்முறையீடு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் யாவை? எப்போது மேல்முறையீட்டில் கூடுதல் சான்றுகள் ஏற்கலாம்?

4. Explain the different stages of a suit.
வழக்கின் பல்வேறு நிலைகளை விளக்குக.

5. What is an 'issue'? Explain the procedure for framing and amending the issues.
எழு வினா என்றால் என்ன? எழு வினாக்களை வனைவதற்கும் திருத்துவதற்கும் உரிய நடைமுறையை விளக்குக.

**PART B** — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Place of suing.
வழக்கிடும் இடம்.

(b) Appeal.
மேல்முறையீடு

(c) Revision.
சீராய்வு

(d) Acknowledgement.
ஒப்பளிப்பு

(e) Attachment before judgment.
தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்தல்

(f) Summary suits.
சுருக்கமுறை வழங்குகள்

(g) Different kinds of decree.
தீர்ப்பாணையின் பல்வேறு வகைகள்

(h) Summons.
அழைப்பாணை

(i) Garnishee order.
மூன்றாம் நபரிடமிருந்து பற்றுகை ஆணை

(j) Next friend
அண்டை நண்பன்

**PART C** — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. Krishna lets a house to Raman at a monthly rent of Rs.10,000/- the rent for the whole of the year 2014, 2015 and 2016 is due and unpaid. Krishnan sues Raman in 2017 only for the rent due for 2015 and 2016 can he file another suit for the rent due for the year 2014.
கிருஷ்ணன் என்பவர் தனக்கு சொந்தமான வீட்டை ராமன் என்பவருக்கு ரூபாய் 10,000/- மாத வாடகைக்கு கொடுத்துள்ளார். வருடங்கள் 2014, 2015 மற்றும் 2016 ஆகியவற்றிற்கான வாடகை நிலுவையில் உள்ளது. கிருஷ்ணன் 2015, 2016-ம் ஆண்டுகளின் நிலுவை வாடகைக்காக மட்டும் 2017-ல் வழக்கு தொடருகிறார். பின்னர் மற்றொரு முறை 2014-ம் ஆண்டிற்கான வாடகை நிலவைத் தொகைக்கு வழக்குத் தொடர இயலுமா?

8. ‘A’, borrowed a sum of Rs. One lakh from B in 2014. January. ‘B’, repeatedly asked ‘A’ to repay the money till May 2017 can ‘B’ file a suit against A for recovery of money. Advise B.
‘A’ என்பவர் ‘B’ என்பவரிடமிருந்து ரூ ஒரு லட்சம் கடன் ஜனவரி 2014-ல் பெற்றார். ‘B’ என்பவர் ‘A’ என்பவரை மே 2017 கடனை திருப்பித்தருமாறு பலமுறை கேட்டுள்ளார். ‘B’ என்பவர் ‘A’-வின் மேல் பணம் திரும்ப பெறுவதற்கு வழக்கு கொடுக்க இயலுமா. ‘B’ க்கு ஆலோசனை வழங்குக.

9. ‘A’ married ‘B’ at cuddalore. They lived together at villupuam. The wife ‘B’ left the matrimonial home and lives with her father at Tindivanam. ‘A’ wants to file a petition for restitution of conjugal rights against ‘B’. Advise ‘A’.
‘அ’ என்பவர் ‘ஆ’வை கடலூரில் திருமணம் செய்து கொள்கிறார். அவர்கள் இருவரும் விழுப்புரத்தில் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். ‘ஆ’ என்பவர் தனது கணவனுடனான வீட்டு விட்டுச் சென்று தன்னுடைய தந்தை வீட்டில் திண்டிவனத்தில் வசித்து வருகிறார். ‘அ’ என்பவர் தாம்பத்திய உறவு மீட்டளிக்கக் கோரி ‘ஆ’ மீது வழக்கு தொடர வேண்டும் என்று விரும்புகிறார். ஆலோசனை வழங்குக.

10. ‘A’ executed a general power of attorney in favour of ‘B’ to look after his properties in India. ‘A’ died in Australia without executing any document relating to his properties in India. ‘X’ and ‘Y’ approached ‘B’ against each other claiming absolute right over the properties of ‘A’. Decide.
‘அ’ என்பவர் ஒரு பொது அதிகார ஆவணத்தின் மூலம் இந்தியாவிலுள்ள தனது சொத்துக்களை பராமரிக்கும் பொறுப்பை ‘ஆ’ என்பவரிடம் விட்டு விடுகிறார். பின்னர் தனது சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்கலாம் ஆஸ்திரேலியாவில் இறந்து விட்டார். ‘இ’ என்பவர் ‘ஈ’ என்பவரும் ஒருவருக்கு எதிராக மற்றவர் ‘ஆ’ என்பவரிடம் ‘ஆ’ வின் சொத்துக்களை முழு உரிமையை கோருகின்றனர். தீர்மானிக்கவும்.

11. ‘A’ sues ‘B’ on a Bill of Exchange for Rs.50,000. ‘B’ holds a judgment against ‘A’ for one lakh. What are the remedies available to ‘B’?

‘அ’ என்பவர் ‘ஆ’விற்கு எதிராக மாற்றாவணம் ரசீது மூலம் 50,000 ரூபாய்க்கு வழக்கு தொடுத்தார். ‘ஆ’ என்பவர் ‘அ’ க்கு எதிராக ஒரு தீர்ப்பாணையை ரூ. ஒரு லட்சத்திற்கு பெற்றுள்ளார். ‘ஆ’ என்பவருக்கு உள்ள பரிகாரங்களை கூறவும்.

12. ‘A’ filed a money suit against ‘B’ after the limitation period. The Court has passed judgement in the money suit. After the judgment, whether the ‘B’ can raise a plea of limitation in the Appellate court?

ஒரு பண வழக்கை ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவருக்கு எதிராக தொடுத்தார். நீதிமன்றமும் அவ்வழக்கில் தீர்ப்பைப் பிறப்பித்துவிட்டது. அந்த தீர்ப்பிற்கு பிறகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் காலங்கடந்து போடப்பட்ட வழக்கு என்று ‘ஆ’ எடுத்துரைக்க இயலுமா?

———————